சங்க இலக்கியங்களில் காட்டுயிரிகள்

திருமதி. ஜே. ராகினிஜெமிமா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம், தூத்துக்குடி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220413

முன்னுரை

காணுயிர்ச் செல்வத்தின் முக்கியப் பரிமாணம் பலவகையான உயிரிங்கள்தான். இந்திய நாட்டின் சிறப்பம்சம் பல்லுயிரிய வளம் எனலாம். மரங்கள், செடிகொடிகள், பாலூட்டிகள், பறவையினங்கள், புச்சிகள், ஊர்வன, நீர்வாழ்வன போன்ற பல்வேறு உயிரினங்கள் அனைத்தும் இந்தப் பல்லுயிரியத்தில் அடங்குகிறது. நீர், நிலம், காடு என்னும் இயற்கைச் செல்வங்களைப் பாதுகாத்துப் பேணும் முறையிலேயேமனிதவாழ்வநலம் பெறுகிறது என்பது சூழலியலார் கருத்தாகும். பழந்தமிழர் காடுகளையும் காட்டுயிரிகளையும் தங்கள் வாழ்வியலோடு இணைந்துப் பார்த்தனர். இயற்கை, பல்லுயிரிய வளம் என்பது பழந்தமிழர் பண்பாட்டோடும் தொடர்படையதாக இருந்தது.

காணுயிர் வகைகள்

பழந்தமிழர் கண்டுணர்ந்த காட்டுயிரிகளை அவர் தம் பாடல்களை அடித்தளமாகக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை.

1. தாவரங்கள்
2. விலங்குகள்
3. பறவைகள்

என்பனவாகும். சங்க இலக்கியங்களில் எங்கு நோக்கினும் நிறைந்து கிடப்பவை இக்காட்டுயிரிகளே. அவை இங்கு விரிவாக ஆராயப்படுகின்றன.

தாவரங்கள்

மனித சமுதாயம் தோன்றும் முன்பே தாவரங்கள் தோன்றிவிட்டன எனலாம். "மனித சமுதாயங்கள். பண்பாடுகள், அறிவு ஒழுங்குகள், ஏன் மனிதனே கூட தோன்றுவதற்கு முன்பேயே இவ்வலகில் அனைத்துவகைத் தாவரங்களும் தோன்றி விட்டன. இந்த உலகில் கடைசியாகத் தோன்றிய இனம் மனித இனம்தான்." என்கிறார் கு.வி.கிருஷ்ணமூர்த்தி

தாவரம் என்பது மரம், செடி, கொடி, புற்கள் போன்றவற்றைக் குறிக்கும் ஒரு உயிரிப் பிரிவாகும். இவ்வகை உயிரினங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தானே நகர்ந்து செல்ல இயலாதவையாகும். உலகில் சுமார் 3,50,000 தாவர வகைகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுலகில் உள்ள நிலப்பரப்பு முழுவதும், ஏன் நீரிலும் கூட வாழ்ந்துவாழவழிசெய்பவைதாவரங்கள் இந்த உலகத்தில் மற்ற உயிரினங்கள் ஆகும். நாட்டுச் செல்வங்கள் முதன்மையானது காட்டுச் செல்வம். தமிழகத்தில் முன்பு நாடு நெடுகிலும் காடுகள் ஏராளமாக அடர்ந்துவளர்ந்திருந்தனர். அடர்ந்து செழித்த பல வகைத் தாவரங்களின் தொகுப்பேகாடுகள் ஆகும். இக்காடுகளில் காணலாகும் தாவரங்களைப் பின்பருமாறு பகுக்கலாம்.

1. புற்கள்
2. கொடிகள்
3. செடிகள்
4. மரங்கள்

சங்க இலக்கியங்களில் இவ்வகைத் தாவரங்களைப் பற்றியசெய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன.

புற்கள்

மனித வாழ்வை அகம். புறமாகப் பகுத்துப் பாடிய சங்கப் புலவர்கள் அப்பாடல்களின் உணர்விற்கு வலுவும் அழுத்தமும் கொடுக்க, தாம் கண்ணுற்ற இயற்கைப் பொருட்கள் அனைத்தையும் நுட்பமாய் பயன்படுத்தியுள்ளனர். அவ்வகையில் காட்டுயிர்ச்சூழல் மண்டலத்தில் காணலாகும் பலவகைப் புற்கள் பற்றிய குறிப்பையும் சங்கப் பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

"புறக் காழனவே புல் எனபடுமே
அகக் காழனவேமரம் எனபடுமேசுசுசு

எனத் தொல்காப்பியர் தாவரத் தொகுதிகளைப் புல் எனவும்,மரம் எனவும் இருநிலைகளில் பாகுபடுத்தியுள்ளார். சங்க இலக்கியங்கள் கானுயிரித் தாவரங்களுள் பலவகையான புல் வகைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. அறுகம்புல்
2. நரந்தம்புல்
3. கோரைப்புல்
4. ஊகம்புல்
5. மூங்கில்
6. பனை
7. பாக்கு
8. மரல்
9. தாளிப்பனை

என்பனவாகும் அவற்றள் சில இங்கு விளக்கப்படுகின்றன.

அறுகம்புல்

இது புல் வகையுள் தலையாயச்சிறப்பைப் பெறுவதாகும். இதற்கு அருகு, பதம் எனும் வேறு பெயர்களும் உண்டு" இது எல்லா விதமான மண்ணிலும் வளரும். காய்ந்தாலும் நீர்பட்டால் உடனே செழித்து வளரும் தன்மையை உடையது. இந்த புல் உள்ள நிலம் மண்ணரிப்பில் இருந்தும் வெப்பத்தில் இருந்தும் காக்கப்படுகிறது.

"செங்காற் பதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் மரைய.." **(குறுந்.363)**

என்னும் குறுந்தொகைப் பாடல் வரிகள் சிவந்த தண்டினையும் நீண்ட கதிர்களையும் உடைய அறுகம்புல் பற்றி எடுத்துரைக்கின்றன.

நரந்தம்புல்

இது மான் இனம் விரும்பிமேயும் புல் வகையாகும். இவ்வகைப் புல் சோலைகளில் வளர்ந்துபரவிக் கிடக்கும்.

"நரந்தைநறும்புல் மேய்ந்தகவரி"
"கவிர்ததை சிலம்பின் துஞ்சும் கவரி
(புறம்.132:4)
பரந்து இலங்கு அருவி யொடுநரந்தம்
கனவும்" **(பதிற்.11)**

என கவரிமான் நரந்தம் புல்லை உணவாகக் கொள்வதைச் சங்கப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

கோரைப்புல்

இது எருவை என்றும் பைஞ்சாய்க் கோரை என்றும் கொறுக்கச்சித் தட்டை என்றும் இலக்கியங்களில் வழங்கப்படுகிறது. பன்றிகள் தம் மூக்கால் கிண்டியபுழுதியில் இப்புற்கள் செழித்து வளர்ந்ததாக ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது.

"கேழல் உழுதெனக் கிளர்ந்தஎருவை
விளைந்த செருவின் தோன்றும் நாடன்"
வேய் பயின்று
எருவை நீடிய பெருவரையகம்"
(ஐங்.269)

இதனால் மூங்கில்களுடன் நெருங்கிக் கொறுக்கச்சி முளைத்துப் பரவியுள்ள பெரியமலையின் உள்ளிடம் பற்றியும் அறியமுடிகிறது.

கொடிகள், கானுயிர் வகைகள் ஒன்றான கொடிகள், இயற்கை வளமிக்கஇடங்களில் பின்னிப் பிணைந்து அடர்ந்து வளரும் தன்மையன. பற்றிப் படர செடியோ, புதரோ. மரமோ கிடைத்தால் ஓங்கி வளரும். அடர்ந்து செழித்துக் காட்டைப் பசுமையுடன் தோன்றச் செய்யும். கொடிகள் இறுகப் பின்னி வலிய கயிறுபோல உறுதியுடன் இருக்கும்.

மிளகுக்கொடி

இதுவெப்பமண்டலப்பகுதிகளில்வளரும் தாவரமாகும். இது புத்துக் கொடி இக்கொடி இந்தியாவை வாழிடமாகக் காய்த்து படர்ந்து வளரும் கொண்டது. கேரளநாடு இதன் உற்பத்திக்குப் பெயர் பெற்றது. இக்கொடிகள் மரங்களைப் பின்னிப் பிணைந்து அடர்த்தியாகவளரக் கூடியன. மலைப்பகுதிகளில் இவை செழித்து வளரும். சங்க இலக்கியங்களில் குறிஞ்சிப் பாடல்கள் மிளகுக் கொடி பற்றிய ஏராளமான செய்திகளை அறியத் தருகின்றன.கானுயிர்களான பிற தாவரங்களோடும், விலங்குகளோடும் தொடர்புடையதாக இக்கொடி சங்கப் பாக்களில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். சங்கப் புலவர்களால் இம்மிளகுக்கொடி "கறி" என அழைக்கப்பட்டது.

செடிகள்

சங்கஇலக்கியங்கள்**210**வகையானசெடி, கொடிகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. மலர்கள், மலர்களின் இயல்புகள், மலர்களின் தாவரங்கள் ஆகியன இலக்கிய நயம் தோன்றப் பாடப்பட்டுள்ளன. கானுயிரித் தாவரங்களுள் புறகள், கொடிகள். ஆகியவற்றை அடுத்து, குறிப்பிட்ட உயரம் வரை மட்டுமே வளரக்கூடிய பலவகையான செடிகள் குறித்த செய்திகளையும் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது. மரம், செடி, கொடி ஆகியவற்றைத் தொல்காப்பியர் "மரம்" என்ற குறிப்பிடுகிறார். தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் செடி என்ற சொல்லாட்சி காணப்படவில்லை. மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் தான் முதன் முதலாகச் "செடி என்ற சொல்லின பயன்பாட்டைக் காணமுடிகிறது.

"செடியாயவல்வினைகள்"

(திருவாசகம் 2:5)

பிங்கலநிகண்டில்செடிஎன்றசொல்செடிகள் அடர்ந்த புதரைக்குறிக்கின்றது. "புதர்"| என்ற சொல்லே செடிகளைக் குறிக்கும் சொல்லாகச்சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

முடிவுரை

தமிழகத்தின்இயற்கைச்செல்வத்தின்முக்கியப் பரிமாணம் இங்குள்ள பலவகையான சூழல் தொகுப்புகள்தான். இதனாலேயே பழந்தமிழகம் பலவகையான வாழிடங்களையும் கானுயிர்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

பழந்தமிழர் போற்றியகுறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் சூழல் தொகுப்புகளையும் அத்தொகுதிகளில் காணப்படும் வாழிடங்களையும் அதில் வாழும் உயிரினங்களையும் சூழல் மாறாமல் பாதுகாத்தாலே சூழல் அழிவு ஏற்படாது எனலாம்.

காட்டுயிர்ச் சரணாலயங்களும் தேசியப் பூங்காக்களும், உயிர் மண்டலக் காப்பகங்களும் காட்டுயிரிகளுக்கான வாழிடச் சூழலை இயற்கைமுறையில் ஏற்படுத்திப் பாதுகாத்திடவேண்டும்.